# உடையார்பாளையம் பேரூராட்சி

அரியலூர் மாவட்டம்

ந.க.எண். 41 / 2010 நாள்: 01.06 2010

## <u>அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–2011</u>

### நாடு தழுவிய ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர்கள் மத்திய அல்லது மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.

2. பணிகளுக்கு உரிய ஒப்பந்த படிவங்களை விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 17.06.2010 ம் தேதி வியாழக் கிழமை வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை உடையார்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது **'செயல் அலுவலர்' 'உடையார்பாளையம் பேரூராட்சி'** என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ, அல்லது விரைவு தபால் மூலமாகவோ, பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/- செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பேற்க இயலாது.

3. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகிறவர்கள் வேலையின் மதிப்பீட்டு தொகையில் 2.5 % சதவீதம் தொகையை ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக, ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் தேதிக்கு முன்தினம் மாலை 3.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ **'செயல் அலுவலர்' 'உடையார்பாளையம் பேரூராட்சி'** என்ற முகவரிக்கு செலுத்தி செலுத்துச் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். பெற்றுக் கொள்ளப்பட்ட செலுத்து சீட்டினை பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் வேலையின் பெயரை குறிப்பிட வேண்டும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை உடையார்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 18.06.2010 ம் தேதி வெள்ளி கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை உடையார்பாளையம் பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளி நமுனா அல்லது இதர விபரங்களை அலுவலக நேரங்களில் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது சம்பந்தப்பட்ட பொறியாளரிடம் விபரங்களை பெறலாம்.

6. ஒப்பந்தபுள்ளிகளை ஏற்றுக் கொள்ளவும், நிராகரிக்கவும் பேரூராட்சி பணிக்குழுவிற்கு உரிமை உண்டு.

7. திட்டப் பணிகள் நடைபெறும் போது சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் மேல் ஆய்வு செய்யப்படும்.

8. திட்டப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் பொறியாளர் நடைமுறை நூலில் (Engineering Manual) குறிப்பிட்டுள்ளப்படி, வேலை ஆணையில் குறிப்பிட்டுள்ள தினங்களுக்குள் பணி முடிக்கப்படாத பட்சத்தில் 5 % சதவீதம் அபராத தொகையினை பட்டியல் வழங்கப்படும் போது பிடித்தம் செய்யப்படும் அல்லது செலுத்திய டேவணித்தொகை பறிமுதல் செய்யப்பட்டு, வேலை ஆணை ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

9. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த ஏதேனும் ஐந்து ஆண்டுகளில் (2005-06 முதல் 2009-10) குறைந்த பட்சம் இரண்டு நிதி ஆண்டுகளில் வருடாந்திர நிதி செயல் திறன் தற்போது கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு கூடுதலாக பணிகள் செய்திருக்க வேண்டும். அதற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்

10. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்கள் அவர்களின் பெயரில் தற்போது ஒப்பந்தம் கோரும் பணியை போன்ற பணியின் மதிப்பில் பாதி அளவில் கட்டாயம் பணி செய்திருக்க வேண்டும். அதற்கான பணி விபரம் சமர்ப்பிக்க வேண்டும்.

11. மேற்கண்ட பணிக்கு தேவைப்படும் அனைத்து பொருட்களை ஒப்பந்தகாரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் வாங்கி பயன்படுத்தல் வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவு கோலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் தரத்தை குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. ஒப்பந்தக்காரர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்து முடித்த பணி விபரங்களை ஆண்டு வாரியாக தாக்கல் செய்வதோடு ஏற்கனவே பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்படாமல் உள்ள விபரங்களையும் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

13. தார்சாலை மற்றும் கட்டிடம் அமைக்கும் பணிகள், ஒப்பந்தக்காரர் பணியினை முடிக்கும் நாளிலிருந்து ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன் சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும். கூடுதல் வைப்பு தொகை மேற்படி மதிப்பீட்டில் 5% செலுத்தப்பட வேண்டும்.

14. வேலைக்கான இறுதிப்பட்டியலில், அரசு உத்திரவின்படி டேவணித்தொகை 4% மற்றும் உரிய வருமானவரி, விற்பனைவரி, 0.3% கட்டிட தொழிலாளர் நல சந்தா பிடித்தம் செய்து அரசுக்கு செலுத்தப்படும்.

15. மேலும், ரூ.5.00 இலட்சம் மதிப்பீடுகளில் உள்ள பணிகளுக்கு "http://tntownpanchayats.tn.gov.in/tender" என்ற இணையதளத்தில் இருந்தும், ரூ.10.00 இலட்சம் மதிப்பீடுகளில் உள்ள பணிகளுக்கு "http://www.tenders.tn.gov.in" என்ற இணைதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம்.

**இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில், வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.**

| **வ. எண்** | **வேலையின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** | **டேவணித் தொகை** 2.5 % | **ஒப்பந்தப் புள்ளி படிவம் / விற்பனை வரி** | **வேலை முடிக்க வேண்டிய காலம்** |
|---|---|---|---|---|---|
| 1 | இராஜவீதி தெருவில் தார்சாலை அமைத்தல் | **15.00** | 37500 | 6135 | **90** நாட்கள் |
| 2 | 5வது வார்டு வடக்கு அரிஜனத் தெருவில் சமுதாயக் கூடம் ம்மைத்தல். | **15.00** | 37500 | 6135 | **150** நாட்கள் |
| 3 | பெரியசாமி குளம் தூர்வாரி கரையினை பலப்படுத்தி தடுப்புச் சுவர் மற்றும் படித்துறை அமைத்தல். | **5.00** | 12500 | 1535 | **90** நாட்கள் |
| 4 | தெற்குத் தெரு 14வது வார்டில் சிமெண்ட் சாலை அமைத்தல். | **5.00** | 12500 | 1535 | **60** நாட்கள் |
| 5 | உடையார்பாளையம் பழைய பேருந்து நிலையத்தில் (4 எண்ணிக்கை) கடைகள், நிழற்குடை அமைத்தல். மற்றும் கட்டண கழிப்பறை அமைத்தல் | **10.00** | 25000 | 3070 | **150** நாட்கள் |
| 6 | வார்டு எண்.5, செக்கான் குட்டை மேல்புறம் மயான மேம்பாடு செய்தல் , சிமெண்ட் சாலை மற்றும் பொது உபயோகக் கூடம் அமைத்தல். | **5.00** | 12500 | 1535 | **90** நாட்கள் |
| 7 | 1) வார்டு எண்.1, சாமியார் குட்டையில் தடுப்புச் சுவர் அமைத்தல். | **3.00** | 7500 | 1535 | **60**நாட்கள் |
| | 2) 12வது வார்டு தெற்குத் தெரு புதுக்காலனியில் வடிகால் அமைத்தல். | **2.00** | 5000 | 615 | **60** நாட்கள் |

**(ஒம்) ப. சே. இராஜேந்திரன்**
**செயல் அலுவலர்**
உடையார்பாளையம் பேரூராட்சி
அரியலூார் மாவட்டம்.

**பெறுநர்:**
அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள், உடையார்பாளையம் பேரூராட்சி.

**நகல் :**
அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் விளம்பரத்திற்காக அனுப்பப்படுகிறது.

**நகல் :**

1. மாவட்ட ஆட்சித் தலைவர், அரியலூர், அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களின் மேலான தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், திருச்சிராப்பள்ளி மண்டலம், மாவட்ட ஆட்சியரகம் திருச்சிராப்பள்ளி, அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. உதவி பொறியாளர், உடையார்பாளையம் பேரூராட்சி.
5. உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர்,துணைத்தலைவர் மற்றும் பேரூராட்சி மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் – தகவலுக்காக.
6. அலுவலக தகவல் பலகைக்கு.